# 10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 10.1. அறிமுகம்

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம், கலை மற்றும் பிறதுறை சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, வெளியிடுதல் மற்றும் தமிழ்நாடு அரசு பாடதிட்டத் தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பாடபுத்தகங்களை அச்சிட்டு, விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள 1970ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

1993ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு பாடநூல் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடநூல்களும், சுயநிதி பள்ளிகளுக்கு விற்பனை பாடநூல்களும் அச்சிட்டு, இருப்புவைத்து விற்பனை மற்றும் விநியோகிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஆசிரியர் பயிற்சி குறிப்புகள் எளிய செயல்வழி கற்றலுக்கான அட்டைகள் மற்றும் பிற அரசு துறைகளுக்கான கையேடுகள் அச்சிடும் பணியும் இக்கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இக்கழகம் விற்பனை பிரதிகளுக்கான விலை நிர்ணயம் செய்து விற்பனைப் பாடநூல்களை சுயநிதிப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு நேரடியாகவும் இக்கழக

விற்பனை நிலையம் மற்றும் முகவர்கள் மூலமாகவும் முறையாக விற்பனை செய்து வருகிறது.

**10.2 பணிகளின் வரம்பு**

பாடநூல் அச்சு, விற்பனை மற்றும் விநியோகப்பணிகளை முதன்மையாக மேற்கொண்டு வந்த தமிழ்நாடு பாடநூல் கழகம் 15.05.2013ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா கல்வி உபகரணப் பொருட்களை தரமாக கொள்முதல் செய்து உரிய காலத்திற்குள் வழங்கும் உன்னதப் பணிக்கான ஒருங்கிணைப்பு மையமாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறே தமிழ்நாடு பாடநூல் கழகம், ''தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்'' என 06.9.2013 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2014–15ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் விலையில்லா கல்வி உபகரணப் பொருட்களை கொள்முதல் செய்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. 2014 – 15ஆம் கல்வியாண்டு முதல் சுமார் ரூ.500 கோடி மதிப்பு உள்ள விலையில்லா கல்வி உபகரணப் பொருட்களை இக்கழகம் இதுவரை கொள்முதல் செய்துள்ளது.

## 10.3 முப்பருவமுறை அறிமுகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் வருடம் முழுவதும் எதிர்கொள்ளும் புத்தக சுமையினை குறைக்கும் பொருட்டு 1 முதல் 9ம் வகுப்பு வரையிலான பாடநூல்களை முப்பருவ முறையில் வெளியிடுவதற்கான ஆணை பிறப்பித்தார்கள். அதனடிப்படையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் புத்தகம் அச்சிடும் முறையை மாற்றி 1 முதல் 9ம் வகுப்பு வரை உள்ள பாடநூல்கள் முப்பருவ முறையிலும் 10, 11 , 12ஆம் வகுப்பு பாடநூல்கள் வருடாந்திர நூல்களாகவும் அச்சிட்டு வழங்கி வருகிறது. இந்நூல்களின் எண்ணிக்கை இதுகாறும் வழங்கி வந்த நூல்களை விட மும்மடங்காகும்.

| பள்ளி கல்வித்துறைக்கான பாடநூல்கள் (2015 – 2016) | | |
|---|---|---|
| வகுப்பு | விலையில்லா பிரதிகள் (கோடியில்) | விற்பனை பிரதிகள் (கோடியில்) |
| பருவம் I (1–9) | 1.34 | 0.73 |
| பருவம் II (1–9) | 1.33 | 0.82 |
| பருவம் III (1–9) | 1.25 | 0.82 |
| வருடாந்திர பாடநூல்கள் (வகுப்பு 10–12) | 1.92 | 0.67 |

## 10.4 பிற துறைகளுக்கு ஆற்றும் பணிகள்

பாடநூல்கழகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் நிர்வாகத்தில் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், அரசுத்தேர்வுகளை எதிர் கொள்ள ஏதுவாக துறைகள் மூலம் வழங்கப்படும் தேவைக்கேற்ப சிறப்பு வழிகாட்டி கையேடுகளை அச்சிட்டு வழங்குகின்றது. தொழில் நுட்ப கல்வி இயக்ககம், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, வருவாய் துறை மற்றும் தேசிய பங்கு சந்தை ஆகிய துறைகளுக்கும் முகமைகளுக்கும் பாடத்திட்டங்கள் தொடர்புடைய புத்தகங்கள் தரமானவையாக காலத்தே அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

ஆகமொத்தம் வருடத்திற்கு சுமார் 10 கோடி புத்தகங்கள் பள்ளி கல்வித்துறைக்கும், பிற துறைகளுக்கும் அச்சிட்டு வழங்கப்படுகிறது.

பாடநூல்கள் 80 / 60 ஜிஎஸ்எம் ஹைடெக் மேப்லித்தோ என்னும் முதல் தரமான தாளில் அச்சடிக்கப்படுகிறது. இவை தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. பாடபுத்தகத்தின் மேலட்டைகள் 230 ஜிஎஸ்எம் மல்டி லேயர் கோட்டட் போர்டுகள் உபயோகப்படுத்தி அச்சிடப்படுகிறது. மேலட்டைகளை தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்

றுவனத்தின் மொண்டிப்பட்டி அலகிலிருந்து **2016–17** முதல் கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் தாள் மற்றும் மேலட்டைகளுக்கான விலையை அரசு அளவிலான உயர்மட்ட பேச்சுவார்த்தை குழு நிர்ணயம் செய்கின்றது. நடப்பாண்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தாள் கொள்முதல் விவரம் :

| பொருள் | 2016 - 2017 | |
|---|---|---|
| | எண்ணிக்கை (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூ.கோடியில்) |
| தாள் | 34000.00 | 202.00 |
| மேலட்டை | 2800.00 | 13.07 |

## 10.5 பணியாளர்களின் அதிகரிப்பு

பாடநூல்களின் அச்சுப்பணியை உரிய காலத்தில் செவ்வனே செய்திட தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்கள் செயல்படுகின்றனர். மேலும் கொள்முதல், பணியாளர் நலன் மற்றும் சட்ட விவகாரங்கள் தொடர்பான பணிகளுக்கு

அனுபவமிக்க நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012–13 ஆம் கல்வியாண்டு முதல் இக்கழக பணிவரையறை பன்மடங்கு விரிவான வளர்ச்சி அடைந்துள்ளதால், இக்கழகத்திற்கு தேவையான 48 தொழில்நுட்ப மற்றும் பொது பணியாளர்களை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் பணி அமர்த்திக்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பணியாளர்களை அதிகரிக்கும் முயற்சியில் முதற்படியாக 2015–16 ஆம் கல்வியாண்டில் கருணை அடிப்படையில் 12 இளநிலை உதவியாளர்கள் இக்கழகத்தில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பள்ளிகளுக்கு சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என்பது திண்ணம்.

## 10.6 தர ஆய்வு

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் கொள்முதல் செய்யும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்துடன் விளங்கிட நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகளை முறையாக பின்பற்றி வருகிறது.

புத்தகப்பை, காலணி, வண்ணப் பென்சில், வண்ணம் தீட்டும் குச்சி, கணித உபகரணப் பெட்டி, கம்பளிச் சட்டை ஆகிய

பொருட்களை கொள்முதல் செய்வதற்கு என உரிய தர அளவீடுகள் மத்திய அரசின் பல்வேறு துறையின் கீழ் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஆய்வுக்கூடங்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்தியின் போதும் பின்னர் விநியோகம் செய்யப்பட்ட பின்னரும் பிரத்தியேக ஆய்வுக்கூடங்கள் மூலம் தர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் தொழில் நுட்பம் மற்றும் தர அளவீடுகளை செம்மைபடுத்தி தெளிவாக்கிட அவ்வப்போது உரிய நிபுணர்களை கொண்டு மறு ஆய்வும் செய்யப்படுகிறது. இதைப்போன்றே பாடப்புத்தக அச்சுப் பணிகளும் நிர்ணயிக்கப்பட்ட தரம் பேணப்படுவதை தொழில்நுட்ப பணியாளர்களால் சரிபார்க்கப்படுகிறது. தரக் குறைபாடுகளிருப்பின் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

## 10.7 பிற மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தமிழ்ப் பாடநூல்கள் விநியோகம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ் மொழிப் பாடநூல்களை பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பிற வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் தமிழ்மொழியை இரண்டாம் பாடமாக பயிலும் மாணவர்களுக்கும் வழங்குகிறது.

மகாராஷ்டிரா, புதுதில்லி, குஜராத், கேரளா, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் உள்ளிட்ட பிற மாநிலங்களில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கொண்டு பயிலும் மாணவர்களுக்கு தமிழ் பாடநூல்கள் விலையில்லாமல் விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வகையில் **2015 – 2016** ஆம் ஆண்டில் **29,000** பாடநூல்கள் பிற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மலேசிய தூதகரத்தின் கோரிக்கையின்படி **500** தமிழ்ப் பாடநூல்கள் மலேசியா நாட்டிற்கும் **2015– 2016** ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் இணைப்புப் பெற்ற பள்ளிகளில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு பாட திட்டத்தின்படி தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. ஆகவே மேற்படி பள்ளிகளின் கோரிக்கைகளின்படி **1** முதல் **10** ஆம் வகுப்பு வரை தமிழ்ப்பாட நூல்கள் ஆண்டு பதிப்பாக ஒரே புத்தகமாக அச்சிடப்பட்டது. இவ்வகையில் **7.47** இலட்சம் விற்பனைப் பிரதிகள் **2016–17** ஆம் கல்வியாண்டில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 10.8 தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் 2006

தமிழ்நாடு கற்றல் சட்டம், அரசு அறிவிக்கை நாள் **18.09.2014**ன் படி தமிழ் மொழி பாடம், தமிழ்நாட்டில் உள்ள மாநில

வாரியம் மட்டுமல்லாமல் பிற வாரியங்களின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான தமிழ் மொழி பாடநூல்கள் கீழ்கண்டவாறு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பாடநூல் விற்பனை

| வருடம் | விற்பனை |
|---|---|
| 2014– 2015 | 3,84,000 |
| 2015 –2016 | 5,95,200 |
| 2016–2017 | 7,47,000 |

### 10.9 இணையத்தில் கட்டணமின்றி புத்தகங்களை பெறும் வசதி

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் அச்சிடப்படும் அனைத்து பாடநூல்களும் மாணவர்களுக்கு கிடைக்கப் பெறும் வகையில் www.textbooksonline.tn.nic.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் விலையின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள் தேவைப்படும்பொழுது தடையின்றி புத்தகங்களை பெற்றுக் கொள்ள இயலும்.

**10.10 பள்ளிகளுக்கு பாடநூல் விற்பனை மற்றும் விநியோகம்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சுயநிதி பள்ளிகளுக்கான விற்பனை நூல்களுடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான இலவச புத்தகங்களையும் சேர்த்து பெரும் அளவிலான பாடப் புத்தகங்களை கையாளுகின்றது.

விற்பனைப் புத்தகங்களை உரிய காலத்தில் மாணவர்களுக்கு வழங்கிட ஏதுவாக, தொன்றுதொட்டு நடைமுறையில் உள்ள தரமான விநியோக முறை கடைபிடிக்கப்படுகிறது. இலவச பாடநூல்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு காலத்தே வழங்கிட ஏதுவாக அச்சகத்தாரிடமிருந்து நேரடியாக 67 மாவட்டக் கல்வி மையங்களுக்கும் கொண்டு சேர்க்கப்படுகின்றன. 2015 –16 ஆம் ஆண்டில், 5.84 கோடி புத்தகங்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு உரிய காலத்தில் சிறப்பு விநியோக முறை மூலம் வழங்கப்பட்டது.

அரசு உதவிபெறா சுயநிதி கல்வி நிறுவனங்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திடமிருந்து புத்தகங்களை மொத்தமாக கொள்முதல் செய்து மாணவர்களுக்கு விநியோகிக்கின்றனர். இணையதளம் மூலம் புத்தக விநியோக முறை இப்பள்ளிகளுக்கு புத்தக கொள்முதலை எளிமைபடுத்தியுள்ளது. இம்முறை முன்னோடியாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும்

திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மே மாதம் **2015**ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களது அனுபவம் மற்றும் கருத்துகளுக்கு ஏற்ப இணையதள விற்பனை மாநிலம் முழுவதும் ஆகஸ்ட் **2015** முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து சுயநிதிப் பள்ளிகளும் தம்முடைய தனி அடையாள (UDISE) எண்ணை பயன்படுத்தி இணையத்தில் பதிவு மேற்கொண்டு தமது புத்தக தேவையை பதிவிடுகின்றனர். இந்திய அஞ்சல் துறை மூலமாக தங்களுடைய இடத்திலேயே புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளும் கூடுதல் வசதியும் பள்ளிகளுக்கு செய்து தரப்பட்டுள்ளது. இதன் மூலம் சுயநிதி பள்ளிகளுக்கு புத்தக கொள்முதல் எளிமைபடுத்தப்பட்டுள்ளது.

## 10.11 இணையதள சில்லரை விற்பனை

பாட புத்தகங்களை தனி நபர்கள் மற்றும் மாணவர்கள் எவ்வித சிரமமுமின்றி பெறும் பொருட்டு இணைய விற்பனை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சேவையை மேலும் மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் அமைந்துள்ள அரசு கேபிள் டி.வியின் பொதுச்சேவை மையங்கள், புத்தகத் தேவையை பதிவு செய்து கட்டணம் செலுத்தும் மையங்களாக மார்ச் 2016 முதல் நியமிக்கப்பட்டுள்ளன. மேலும் பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் தங்கள் இருப்பிடத்திலேயே புத்தகங்களை பெறும் வசதி கூரியர் சேவை நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

தனிநபர், மாணவர்கள் பதிவிட்ட புத்தகங்களின் வரவினை கண்காணிக்கும் (Tracking) வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

### 10.12 இணையதள விற்பனையின் பயன்கள்

இணையதள விற்பனை சேவை செயல்படுவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பள்ளிகள் பெறும் பயன்கள் பின்வருமாறு:

- பள்ளிகளின் விற்பனை பிரதிகளின் தேவை துல்லியமாக கணக்கிடப்பட்டு அச்சிடப்படுகிறது. தேவைக்கு அதிகமான புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் தேவையற்ற இருப்பு வைத்தல் தவிர்க்கப்படுகிறது.
- இணையதளம் மூலம் இருப்பினை பதிவேற்றுவதால் வெளிப்படையான மற்றும் பொறுப்பான செயல்பாடு ஏதுவாகிறது.
- இணையதளம் மூலம் பாடநூல் இருப்பிற்கேற்ப தனிநபர்களும் பள்ளிகளும் தங்கள் தேவையை பதியலாம். தேவைகளை இருப்பிற்கேற்ப பதிவு செய்து பணம் செலுத்துவதால் தொகை பெறப்பட்டவுடன் அவர்களின் கேட்பு இருப்பிலிருந்து கழிக்கப்பட்டு முன்பதிவு செய்யப்படுகிறது. இதன் மூலம் மிகையான தொகை பெறுவது தவிர்க்கப்படுகிறது.

- இணையதளம் மூலம் பாடநூல்கள் தேவை பதிவு செய்யப்படுவதால் அதற்கான தொகை கால விரயமின்றி இக்கழக கணக்கில் உடன் வரவு வைக்கப்படுகிறது. இதனால் வரைவோலை செலுத்தி பாடநூல் பெறும் முறை நிறுத்தம் செய்யப்பட்டது.

- முகவர்களிடம் அதிக விலை கொடுத்து வாங்கிய நிலையும் வழக்கொழிந்த புத்தகங்களை வாங்கிடும் நிலையும் தவிர்க்கப்படுகிறது.

## 10.13 தணிக்கை

இக்கழகம் மேற்கொள்ளும் அனைத்து பணிகள் மற்றும் பரிமாற்றங்களிலும் வெளிப்படைத்தன்மை இருப்பதை கண்காணிக்க உள்தணிக்கைக்குழு உருவாக்கப்பட்டு உடனுக்குடனான கண்காணிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு மாநில கணக்காயர் அலுவலக அலுவலர் ஒருவர் அயற் பணியில் தலைமை வகிக்கிறார். மேற்படி உள்தணிக்கையானது தற்பொழுதுள்ள அரசு துறை தணிக்கை குழு மேற்கொள்ளும் தலைமையக கணக்குகள் மற்றும் வட்டார அலுவலக கிடங்குகளுக்கான தணிக்கைகளுடன் கூடுதல் கண்காணிப்பை நல்குகிறது. இத்தணிக்கைகள் தவிர சிறப்பு ஆய்வுகளும் அவ்வப்பொழுது அரசு துறை மூலம்

மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மேற்பார்வையை சிறப்பாக்கி நடைமுறையில் உள்ள குறைகளை கண்டுபிடிக்கவும், களையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின் மூலம் கீழ்காணும் இடங்களில் நடைமுறை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- புத்தகங்களை வழக்கொழிந்தவையாக ஒதுக்கிடுதல்.
- வழக்கொழிந்த புத்தகங்களை அப்புறப்படுத்துதல்.
- தரையிருப்பு சரிபார்த்தல்.
- அச்சாணை மற்றும் பட்டியல் தொகை வழங்கும் பணி முறைபடுத்துதல்.
- தரக் குறைபாடு மற்றும் தாமதித்து பாட நூல்கள் வழங்கும் அச்சகதாரர்களுக்கு அபராதம் விதித்தல் .
- கோப்புகளை வழிமுறையாக சமர்பிப்பதற்கு நெறிகள் வகுத்தல்.
- பொது நிர்வாகம், கொள்முதல், கணக்கு, விற்பனை மற்றும் அச்சு ஆகிய பிரிவுகளுக்கு அதிகார பகிர்வு வரன்முறை செய்தல்.

**10.14 கிடங்கு மற்றும் பராமரிப்பு**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் **22** வட்டார அலுவலக கிடங்குகளை கொண்டு புத்தகங்கள் இருப்பு வைத்தல், விநியோகித்தல், பள்ளிகளுக்கு மொத்த விற்பனை செய்தல் மற்றும் பிற துறைகளுக்கு வழங்குதல் போன்ற பணிகளை செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **23.09.2015** அன்று தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் சொந்த கிடங்குகளான சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பர்கூர், தஞ்சாவூர் மற்றும் சிவகாசி கிடங்குகளை ரூ.**30.00** கோடி மதிப்பீட்டில் நவீனமாக்கிட அறிவித்தார்கள். பள்ளிகளுக்கு வழங்கப்படும் புத்தகங்கள் மற்றும் விலையில்லா பொருட்களை நேரத்துடனும் நல்ல தரத்துடனும் வழங்கிடும் மைய நிறுவனமான தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தனது பணிகளை செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக வெளியிடப்பட்ட இவ்வறிவிப்பின் அடிப்படையில் இக்கழகம் உடனடியாக இதனை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதனடிப்படையில் தானியியங்கி முறையில் இருப்புவைத்து வெளிவழங்கும் நவீன முறை கிடங்குகளை அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைமை அலுவலகம், டி.பி.ஐ வளாகத்திலுள்ள சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதனை ரூ.2.56 கோடி மதிப்பிட்டில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.15 பயிற்சிகள்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக பணியாளர்களுக்கு மேலாண்மை திறத்தை உயர்த்தி பணிகளின் தரத்தை மேம்படுத்திட சிறப்பு திறன் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அனுபமிக்க வல்லுநர்களைக் கொண்டும் இக்கழக பணியாளர்களுக்கு சிறந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. நிகழ்கால மற்றும் நீண்ட காலத் தேவைக்கேற்ப பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. புதிதாக பணியில் சேர்பவர்களுக்கு அறிமுகப்பயிற்சி (Induction), வேலையிலிருந்தபடியே பயிற்சி (on job training) மற்றும் வகுப்பறை (theory) பயிற்சிகள் 30 நாட்களுக்கு அளிக்கப்பட்டன. பணியில் உள்ளோருக்கு கணினிப் பயிற்சி, தலைமைப் பண்புகள், நுகர்வோர் சேவை போன்ற பணியிடைப் பயிற்சிகள் படிப்படியாக அளிக்கப்படுகின்றது. மேலும் யாவரும் விடுபடா வண்ணம் பயிற்சிகள் அளிப்பதற்கேற்ப பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது.

**10.16 பணியாளர்களுக்கான நலத் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திய புதிய காப்பீட்டு திட்டம் 2012, இக்கழக பணியாளர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கிடங்கில் பணிபுரியும் பணியாளர்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியம் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் வட்டார அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் தேநீர்ப்படி வழங்கப்படுகிறது.

இக்கழக முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் அலுவலக ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கான உணவுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு குளிர்சாதனப்பெட்டி நுண்ணலை அடுப்பு (Microwave oven) மற்றும் மின் காந்த அடுப்பு ஆகியவைகள் வழங்கப்பட்டுள்ளன.

**10.17 உயர் கல்வி நூல்களை மின்மியமாக்குதல்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தினால் ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட சுமார் 1000 உயர் கல்வி மற்றும் கல்லூரி நூல்களுக்கு எப்பொழுதும் தேவை இருப்பதால் புதிய தொழில்நுட்ப முறையில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும்

பிறருக்கு பயன்படும் வகையில் மின்மியமாக்கவும், மறுஅச்சு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.18 முடிவுரை**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பொது மற்றும் தொழில்நுட்ப கல்வியின் தரத்தினை உயர்திடுவதற்காக மிக உன்னத நோக்கங்களைக் கொண்டுள்ளது. அந்நோக்கங்களுக்கு ஏற்றவாறு செயல்பாடுகள் உருவாக்கப்பட்டு இக்கழகம் உன்னத வளர்ச்சியை அடைந்து வருகிறது.

**பா.பென்ஜமின்**
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத் துறை அமைச்சர்